பொது நிர்வாக சுற்றறிக்கை இல. 41/94

எனது இல. ஏச்எ/டீஎ/2/4/93/94

பொது நிருவாக, உள்நாட்டலுவல்கள்,
பெருந்தோட்டத் தொழில், பாராளுமன்ற
அலுவல்கள் அமைச்சு,
சோறிங்டன் சதுக்கம்,
கொழும்பு - 07
27 டிசம்பர் 1994

அனைத்து செயலாளர்களுக்கும்,
பிரதம செயலாளர்களுக்கும்/ஆளுநரின்
செயலாளர்களுக்கும், திணைக்களத்
தலைவர்களுக்கும்,
மாவட்ட செயலாளர்கள்/அரசாங்கஅதிபர்களுக்கும்,
பிரதேச செயலாளர்களுக்கும்,

## பிரதேச நிர்வாகத்தினைச் சீர்மைப்படுத்தல்

1995 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் முதலாந் திகதி தொடக்கம் நடைமுறைப்படுத்துவதற்காக பிரதேச நிருவாகத்தினைச் சீர்மைப்படுத்தும் பொருட்டு அரசாங்கம் பின்வரும் தீர்மானங்களை எடுத்துள்ளது:

(1) அனைத்து அமைச்சுக்களினதும் திணைக்களங்களினதும் தொடர்பாகப் பிரதேசச் செயலாளர்களினால் எடுக்கப்படும் நடவடிக்கைகள் மாவட்டச் செயலாளர்கள்/அரசாங்க அதிபர்களினால் ஒருங்கிணைக்கப்படும்.

(2) மாவட்ட அபிவிருத்திக்காக ஒதுக்கப்பட்டுள்ள சகல அரச நிதியங்களும் பிரதேசச் செயலாளர்களின் ஒத்துழைப்புடன் மாவட்டச் செயலாளர்/அரசாங்க அதிபரினால் பயன்படுத்தப்படும். தற்போதைய மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுவானது உறுதிப்படுத்தப்பட்டு, மாவட்ட அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்களை நடைமுறைப்படுத்துவதற்கு பயன்படுத்தப்படும். பிரதேச அபிவிருத்தித் திட்டம் பிரதேச மட்டத்திலே தொடர்ந்து நடைமுறையில் இருக்கும். அதே வேளையில் பிரதேசத் திட்டங்களின் தொகுப்பாக மாவட்டத் திட்டம் அமையும்.

(3) பிரதேசச் செயலாளர்கள் மீதான நிருவாக மேற்பார்வையும் ஒருங்கிணைப்பும் மாவட்டச் செயலாளர்கள்/அரசாங்க அதிபர்களிடம் பொறுப்பிக்கப்பட்டுள்ளது.

பிரதேசச் செயலாளர்கள் தொடர்பாக, மாவட்டச் செயலாளர்கள்/அரசாங்க அதிபர்கள் பின்வரும் கடமைகளை ஆற்றுவதற்கு உரித்துடையவர்களாவர் :

(i) நிகழ்ச்சி முன்னோடித் திட்டத்தினை அங்கீகரித்தல்.
(ii) சம்பள ஏற்றங்களுக்கான பரிந்துரைத்தல்.
(iii) விடுகைக்கான அமைதி.
(iv) விடுமுறை நாட்களில் கடமை புரிதற்கான அமைதி.

(4) பிரதேசச் செயலாளர்கள் எடுத்த முடிவுகள் தொடர்பாக மறு-பரிசீலனை செய்தலும் [illegible] பொலட்டு மேன்முறையீட்டு அதிகாரிகளாகவும் கடமையாற்றுவர்.

(5) கிராம அதிகாரியின் நாளாந்தக் கடமைகளை மேற்பார்வை செய்யும் பொறுப்பு பிரதேசச் செயலாளர்களிடமே இருக்கும். பிரதேசத்தினுள்ளே கிராம அதிகாரிகளின் இடம் மாற்றுதலைப் பிரதேசச் செயலாளர்களே செய்வர். எனினும் மாவட்ட மட்டத்திலான கிராம அதிகாரிகளின் இடமாற்றம் மாவட்டச் செயலாளர்கள்/அரசாங்க அதிபர்களே தீர்மானிப்பர். கிராம அதிகாரிகளின் மேன்முறையீடுகள் தொடர்பாக மாவட்டச் செயலாளர்களே முடிவெடுப்பர்.

(6) ஒவ்வொரு மாவட்டச் செயலாளர்/அரசாங்க அதிபரின் கீழ் இயங்கும் உள்ளகக் கணக்காய்வுப் பிரிவானது அனைத்து பிரதேசச் செயலாளர்களையும் கணக்காய்வு செய்ய ஈடுபடுத்தப்படும்.

ஆர். எஸ். ஜயரத்ன
செயலாளர்
பொது நிருவாக, உள்நாட்டலுவல்கள், பாராளுமன்ற அலுவல்கள், பெருந்தோட்டத்தொழில் அமைச்சு